**ORIGINAL ARTICLE**

# முஸ்லிம்களிடையிலான குழந்தை தத்தெடுப்பு அம்பாறை மாவட்ட நேர்வு நிலை பற்றிய ஆய்வு

# [MUSLIMKAḶIṬAIYILĀṈA KUḺANTAI TATTEṬUPPU AMPĀṞAI MĀVAṬṬA NĒRVU NILAI PAṞṞIYA ĀYVU]

# A STUDY ON THE INCIDENCE OF CHILD ADOPTION AMONG MUSLIMS IN AMPARA DISTRICT

**A.L. பாத்திமா ஷமீதா / A.L. Fathima Zameetha** *[1]
**M.I.M. ஜெஸீல் / M.I.M. Jazeel** [2]

[1] Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka, Sri Lanka.
Email: fathimazameetha@seu.ac.lk
[2] Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka, Sri Lanka.
Email: jazeelmi@seu.ac.lk

*Corresponding author

DOI: https://doi.org/10.33306/mjssh/243

**Abstract**

Child adoption has been a long practiced among societies since ancient times. It was legally recognized in the world with its legal provisions. Muslims have also adopted children in contrast to Islamic guidelines and regulations suggesting alternatives. This research article examines the child-adopting practice among Muslim families in the Ampara district of Eastern Sri Lanka. This study was based on data analysis obtained through interviews with 50 such families and ten scholars and activists of this region. In the interview, certain aspects are covered and it takes about 15 minutes for each interview. The findings demonstrate that infertility and its consequence of social and psychological problems reflected in domestic violence are the prime contexts for child adoption. Furthermore, social and cultural patterns of this region have given female children more preference in child adaptation. This study provides awareness to concerned parties and decision-makers.

**Keywords**: Child adopting; Sri Lankan Muslim; Family problems; Ampara District.

**ஆய்வுச் சாரம்**

குழந்தையைத் தத்தெடுத்து வளர்த்தல் மானிட சமூகங்களிடையே நீண்ட காலமாக வழக்கில் உள்ள ஒரு நடைமுறையாகும். இன்று உலகளாவியளவில் சட்ட ரீதியான ஏற்பாடுகளுடன் இந்த நடத்தை அங்கிகரிக்கப்பட்டுள்ளது. இஸ்லாத்தின் வழிகாட்டுதல்கள், விதிமுறைகளுக்கு மாறாக முஸ்லிம்களும் குழந்தைகளைத் தத்தெடுத்துக் கொண்டுள்ளனர். இவ்வாய்வுக் கட்டுரை

இலங்கையின் கிழக்கில் அம்பாரைமாவட்ட முஸ்லிம்களின் தத்தெடுத்தல் செயற்பாட்டை பரீசிலனைக்குட்படுத்துகிறது. அவர்களில் எழுமாறாக தெரிவுசெய்யப்பட்ட 50 குடும்பங்கள் மற்றும் இப்பிரதேசத்தைச் சேர்ந்த அறிஞர்கள், செயல்பாட்டாளர்கள் 10 பேர்கள் ஆகியோரிடமிருந்து நேர்காணல் மூலம் பெறப்பட்டதகவல்களின் பகுப்பாய்வினை இவ்வாய்வு அடிப்படையாகக் கொண்டுள்ளது. குழந்தைப்பேறின்மை, அது இட்டுச் சென்ற சமூக, உளவியல் பிரச்சினைகள், அவற்றின் பிரதிபலிப்புகளான குடும்ப வன்முறைகள் குழந்தைதத்தெடுப்புக்கான பிரதான சூழயமைவாக உள்ளது என்பது முக்கிய கண்டறிதலாகும். மேலும் பிரத்தியோகமான சமூகப் பண்பாட்டுக் கூறுகளின் செல்வாக்கினால் பெண் குழந்தைகளே பெரிதும் தத்தெடுக்கப்பட்டுள்ளார்கள். ஆய்வின் கண்டறிதல்கள் சம்பந்தப்பட்டோருக்கும் தீர்மானம் எடுப்பேருக்கும் விழிப்புணர்வைவழங்கவல்லது.

**கருச்சொற்கள்**: குழந்தைத் தத்தெடுத்தல், இலங்கை முஸ்லிம்கள், குடும்பப் பிரச்சினை, அம்பாரை மாவட்டம்

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 15th April 2023, revised 6th May 2023, accepted 13th May 2023

**முன்னுரை**

குழந்தைகளை தத்தெடுத்து வளர்த்தலானது மனித வரலாற்றில் நீண்டகாலமாக நிலவிவருகின்ற, குறிப்பாக திருமண உறவின் விளைவாக குழந்தைச் செல்வங்களை பாக்கியங்களாக பெற இயலாத சந்தர்ப்பங்களில் பெரிதும் பின்பற்றப்பட்ட சம்பிரதாயமாக காணப்படுகிறது (தினகரன், 2011)[1]. புராதன கால மக்களிடையே தத்தெடுப்பானது வாழ்வியல் அங்கமாக திகழ்ந்தனை 4000 ஆண்டுகளுக்கு முற்பட்ட இலக்கியங்கள் மற்றும் சட்ட மூலங்களிலிருந்து அறிய முடியுமாக உள்ளது (Zhang, 2006)[2]. எகிப்து, கிரேக்கம், ரோம் மற்றும் பெபிலோனியா என பல சமூகங்களில் தத்தெடுக்கும் வழமை இருந்தமைக்கு ஏராளமான ஆதாரங்கள் கிடைத்துள்ளன (United Nation,2009)[3].

தத்தெடுத்தல் எனும் செயற்பாடு பரவலாக எல்லா சமூகங்களிலும், நாடுகளிலும் பல்வேறு வடிவங்களில் அன்று தொட்டு இருந்து வந்துள்ளதனைப் போன்று, இலங்கையிலும் அதன் செயற்பாடு புரையோடிப் போய் இருந்தமையினை ஏராளமான வரலாற்றுச் சான்றுகள் சுட்டிக்காட்டுகின்றன (Rifath et al, 2019)[4]. மேலும் குழந்தை தத்தெடுப்பிற்கான சட்ட நடைமுறைகளும் வழக்கத்தில் இருந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது (Marsoof2020)[5]. இலங்கை வாழ் மக்கள் மத்தியில் குழந்தை தத்தெடுப்பு எனும் நடைமுறை காணப்படுவது போன்று முஸ்லிம்கள் மத்தியிலும் இச்செயற்பாடு இடம்பெற்று வருகின்றமை கண்கூடு. அது போன்று முஸ்லிம்கள் கணிசமாக வாழும் அம்பாறை மாவட்டத்திலும் குழந்தை தத்தெடுப்பு செயற்பாடு புரையோடிப்போய் இருக்கிறது.

குழந்தைகளைத் தத்தெடுக்கும் நடைமுறை பொதுவாக சமூகத்தில் ஒரு மரபாக இருப்பினும், இதனை நாட்டின் பொதுச் சட்டம் அனுமதித்த போதிலும், மக்கள் அதனை நியாயம் கண்டு அங்கீகரித்த போதிலும் அது தெளிவான இறை சட்ட வசனங்களுக்கு முரணாக

அமைந்த ஒரு பிழையான மரபாகவே காணப்படுகின்றது. ஆகவே இஸ்லாமிய ஷரீஆ கண்ணோட்டத்தில் அல்குர்ஆன் மற்றும் ஹதீஸின் தெளிவான வாசகங்களுக்கமைய குழைந்தையை தத்தெடுத்து வளர்த்தல் என்பது இஸ்லாத்துக்கு முரணான தடைசெய்யப்பட்ட ஒரு விடயமாக காணப்படுகின்றது தெளிவாகின்றது (Rifath, et al,2019)[4].

மனித நலன்களையும் சமூக ஒழுங்குகளையும் உயரிய நிலையில் பேணிப் பாதுகாத்து அவர்களுக்கு வரவிருக்கும் தீங்குகளை விட்டும் களைவதே இஸ்லாமிய ஷரீஆவின் உயரிய நோக்கமாகும். அந்தவகையில் குழந்தைகளை தத்தெடுத்து வளர்ப்பதில் மனிதனின் ஒரு சில அபிலாசைகள் நிறைவேறிய போதும் அதனால் ஏற்படும் பாதக விளைவுகள் அதிகம் என்பதனால் இஸ்லாம் அதனை முற்று முழுதாக தடைசெய்கிறது என்பர். அவ்வாறு தடைசெய்த இஸ்லாம் அதற்கான மாற்றீடுகளை ஏற்படுத்தத்தவறவில்லை. இந்நிலையிலும் அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் குழந்தை தத்தெடுப்பினை மேற்கொண்டு வருகின்றார்கள். இஸ்லாம் ஆதரிக்காத தடுக்கின்ற விடயத்தினை அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் மேற்கொண்டு வருகின்றார்கள் என்பது ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டிய விடயமாகும். அந்த வகையில் இவ்வாய்வு குழந்தை தத்தெடுப்பு செயற்பாடு தொடர்பாக பரிசீலனைக்குட்படுத்துகின்றது.

## ஆய்வுமுறைமை

பண்பு ரீதியான இவ்வாய்வில், நேர்காணல் தகவல்களை பெறுவதற்கான பிரதானமாக ஊடகமாக பயன்படுத்தப்பட்டது. அந்தவகையில் அம்பாறை மாவட்டத்தில் குழந்தைகளை தத்தெடுத்த முஸ்லிம் குடும்பங்களிடம் இருந்து 50 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டனர். இது தவிர குறிக்கோள் மாதிரியை பயன்படுத்தி மார்க்க அறிஞர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் ஏனைய தொழில் சார் நிபுணர்கள் 10 பேர் நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களிடம் குறித்த சில விடயப் பரப்புக்களிலிருந்து குவிவு மையப்படுத்தப்பட்டதான வினாக்கள் வினவப்பட்டது. ஒவ்வொரு நேர்காணல்களும் சுமார் 15 நிமிடங்களுக்குள் அமையப்பெற்றது. இவ்விரு நேர்காணல்கள் மூலம் பெறப்பட்ட தகவல்கள் குறியீட்டு முறை மூலம் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு வைத்தியசாலை பதிவுப் புத்தகம், நீதிமன்ற வழக்குபதிவுகள், அம்பாறை மாவட்ட பிரதேச செயலகங்களின் அறிக்கைகள் என்பனவும் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. தத்தெடுப்பு தொடர்பான இஸ்லாமிய கண்ணோட்டம் புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் ஆய்வுக்கட்டுரைகள் போன்றனவற்றில் தகவல்கள் சேகரிக்கப்பட்டு விபரண முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

## கண்டறிதல்களும் கலந்துரையாடலும்

### தத்தெடுப்பிற்கான பின்னணி

உலகலாவிய ரீதியிலும் இலங்கையில் தேசியளவிலும்குழந்தைப் பாக்கியமின்மை எனும் ஒரு பொதுவாக பிரத்தியோகமான சூழலில் குழந்தை தத்தெடுப்பு நடைமுறை அமையப் பெற்றுள்ளது. இதற்கமைவாக அம்பாறை மாவட்டத்தில் குழந்தை தத்தெடுப்பிற்கான பிரதான பின்னணியாக குழந்தைப் பாக்கியமின்மை உள்ளது என்பதனை அவர்களின் நேர்காணல் மூலம் வெளிப்படுத்தப்பட்டது. இந்தவகையில்குழந்தைப் பேறின்மையே குழந்தை தத்தெடுப்பிற்கு முக்கிய சூழல் எனும் அம்பாறை மாவட்டத்தின் அனுபவம் இலங்கை தேசிய ரீதியான ஆய்வு

முடிவுகளை (Rifath, et al,2019)[4] ஒத்துள்ளது. மேலும் உலகளாவிய ரீதியிலும் பொதுவாக குழந்தை பேறின்மை தான் தத்தெடுப்பிற்கான வலுவான காரணி என்பதனை ஆய்வு இலக்கியங்கள் சுட்டிக்காட்டியுள்ளன (Bikaie, et al, 2012[6], Zhang, 2006[2]., Bernal et al, 2007[7]., Oladokun, 2009[8]).

தம்பதியினருக்கு மகப்பேறு இல்லாத நிலை அவர்களிடையே உளவியல், குடும்பப் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கின்றது. குழந்தை பேறின்மையால் பல தம்பதிகள் மத்தியில் குடும்பப் பிரச்சினைகள், குறைவான வாழ்க்கைத் திருப்திமற்றும் பதட்டம் போன்ற அதிகமான மனக் கவலைகளுக்கு உள்ளாவதாக (Oladokun, 2009)[8]இன் அவதானக் குறிப்பு எடுத்துக்காட்டுகின்றது. இதன் விளைவாக அனேக மனைவிமார் உடல் ரீதியாக வீட்டு வன்முறைக்கும் ஆளாகியுள்ளதுடன் வீட்டில் மட்டுமின்றி வெளியிலும் அதிக பிரச்சினைகளுக்கு அவர்கள் உள்ளாகியுள்ளனர். அம்பாறை மாவட்டத்தில் குழந்தை இல்லாத குடும்பங்கள் மத்தியில் குறிப்பாக கணவன் மற்றும் மனைவிக்கிடையில் வன்முறைகளும் பிரச்சினைகளும் தேற்றுவிப்பது ஒரு உலகளாவிய அனுபவம் என்பதனை ஆய்வு முடிவுகள்காட்டுகின்றன. குழந்தைகள் இன்மையால் குடும்பங்களுக்கு மத்தியில் வன்முறைகளும், வாக்குவாதங்களும் ஏற்படுகின்றது எனும் பொன்சேகா (Fonseca,2003)[9] ஆய்வுக் குறிப்பு எடுத்துக் கூறகின்றது. இவ்வாறான சூழலமைவுகள் தத்தெடுப்பிற்கான வற்புறுத்தலை ஏற்படுத்தி விட்டுள்ளதை தரவுகள் காண்பிக்கின்றன.

மேலும் ஆய்வுப் பிரதேசத்தில் குழந்தை இன்மையானது பல வகையான சமூக மற்றும் மானசீகப் பிரச்சினைகளை தோற்றுவித்துள்ளது எனலாம். தத்தெடுத்து வளர்த்த முஸ்லிம் குடும்பங்கள் குழந்தை இன்மையால் தாம் சமூகத்தின் கேலிக்கும், கிண்டலுக்கும் உள்ளாக்கியதாக தெரிவித்துள்ளனர். சமூகத்தின் கேலிப் பேச்சுக்கள் அவர்களை மிகவும் மன ரீதியாக துன்புறுத்தியாகவும் குறிப்பிட்டுள்ளனர். குழந்தைகள் இன்மையானது சமூக வாழ்வில் குறிப்பிடத்தக்க விளைவுகளை ஏற்படுத்துவதாக பல்டிமோரே(Baltimore, 2018)[10] குறித்துக் காட்டுகின்றார். சமூகத்தின் எள்ளிநகையாடுயாடுதலே இவ்வாறான தத்தெடுப்பிற்கு துணை போன காரணியாக அமைதுள்ளது எனத் துணியலாம். உலகளாவிய ரீதியில் பொதுவாக குழந்தை பேறின்மையால் ஏற்பட்ட சமூக விளைவுகளே தத்தெடுப்பிற்கான நிர்ப்பந்த சூழலினை ஏற்படுத்தியது என்பதனை ஆய்வு இலக்கியங்கள் உணர்த்துகின்றன (Baltimore, 2018)[10]. ஈரானில் குழந்தைப் பாக்கியம் அற்றவர்களை அவர்களின் குடும்பத்தினர் ஒதுக்கிவைப்பதாக பைக்கி (Bikaie,2012)[6] அடையாளப்படுத்துமளவுக்கு சமூகத்தின் பிரதிகூலமான தாக்கம் வலுவானது. மேலும் (Eke,2014)[11] இகேதனது ஆய்வில் குழந்தை இன்மையானது சமூக ரீதியான அவமானத்தினை பெற்றுத் தரும் ஒரு இழி செயலாக கருதும் அனுபவமானது அந்த சமூகத்தின் நீட்சியை விளக்குகின்றது.

ஆய்வுப் பிரதேசத்தில் அனேகமாக குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்கள் சமூக நிகழ்வுகளில் பங்குகொள்ளுதல் போன்ற விடயங்களை விட்டும் தவிர்ந்து இருக்கும் நிலைகளுக்கு உள்ளாகி இருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும் சமூகம் தன்னை குழந்தைப் பாக்கியம் அற்றவர்கள் என்ற எண்ணத்துடன் பார்ப்பதாக உணர்கின்றனர். இந்தப் பின்னணி தத்தெடுப்பிற்கு வழிகோலியதாக அடையாளப்படுத்த முடியுமாவுள்ளது. இது தொடர்பில் ஒரு பெற்றோர் குறிப்பிட்டமையினைக் காணலாம். “எனது குடும்பத்தில் நடந்த திருமண நிகழ்வின் பின்னர் தான் தனக்கான ஒரு குழந்தை வேண்டுமென்ற வைராக்கியம் எனக்குள் பிறந்தது" (நேர்காணல் 36). இவ்வாறான ஒரு நிலையே தத்தெடுப்பிற்கான சூழலாக அமையவல்லது. மேலும் இது தொடர்பாக உலகளாவிய ரீதியாக அனுபவங்கள் ஏற்கவே

ஆய்வுக்குட்டப்படுத்தப்பட்ட போது சில முடிவுகள் பெறப்பட்டன. குழந்தைப் பேறின்மை காரணமாக ஒரு நபர் தனிப்பட்ட முறையில் அதிகமாக கவலைப்படுவதுடன் சமூக மதிப்பும் இல்லாது போகின்றதாக அடையாளப்படுத்தப்படுகின்றது (Makeret al, 2002)[12]. மார்க்கரின் ஆய்வு முடிவுகளுடன் அம்பாறை மாவட்ட குழந்தை தத்தெடுத்து வளர்த்த முஸ்லிம்களின் நிலையும் நிலைப்பாடும் இணைந்து செல்கின்றமை ஈண்டு சொல்லத்தக்கது.

ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் மொத்த வாழ்க்கை முறையே பண்பாடு எனப்படுகின்றது. மக்கள் தலைமுறை தலைமுறையாகஇ குழுவாகச் சேர்ந்து கற்று வெளிப்படுத்திய நடத்தைமுறைகளும், பழக்கவழக்கங்களும் மரபுகளும் சேர்ந்ததொரு தொகுதியே பண்பாடாகும். பொதுவாக அனைவராலும் பகிர்ந்து கொள்ளப்பட்ட கருத்துக்களும் சமுதாய மரபுரிமையாக பெறப்பட்ட நம்பிக்கை, பழக்கவழக்கங்களும் அடங்கிய தொகுப்பை பண்பாடு என வரையறுப்பர் (Nusrath, 2017)[13]. அந்தவகையில், அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் பண்பாட்டு பாரம்பரியம் நீண்ட வரலாற்றை கொண்டது. முஸ்லிம்கள் என்ற ஒழுங்கில் பார்க்கின்ற போது அதற்குத் தனியான, திட்டவட்டமான பண்பாட்டு ஒழுங்குகள் காணப்படுகின்றன. ஆனால் முஸ்லிம்களின் பண்பாட்டு ஒழுங்கிலே காணப்படுகின்ற சமய சம்பிரதாயங்களையும், பிரதேச தாக்கத்தையும் நாம் புறம் தள்ளி விட முடியாது என்பதையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

ரோம காலத்திலிருந்து ஆண் குழந்தைகளை தத்தெடுக்கும் வழக்கம் இருந்து வந்தமையானது பொதுவாக சர்வதேச ரீதியிலும் ஆண் குழந்தையின் முக்கியத்துவத்தினையும் அதன் மதிப்பினையும் இன்று வரை நிலை நாட்டி வருகின்றதனை பல குறிப்புக்களின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (Ben-Nun, 2016)[14]. ஒப்பிட்டளவில் அம்பாறை மாவட்டத்தில் ஆண் குழந்தைகளை எடுக்கும் வழக்கத்தினை விடவும் அதிகளவில் பெண் குழந்தைகளை தத்தெடுக்கும் வழக்கம் புரையோடிப்போயுள்ளது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் இலங்கையின் வாழ்வியல் அம்சங்களும், நடைமுறையும் சர்வதேச நாடுகளுக்கு மாற்றமாக இருப்பதன் காரணமாகவும், முஸ்லிம்களின் கலாசார, பண்பாட்டு விடயங்களும், சமூக மரபுகளும் அதிலும் குறிப்பாக அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் தனித்தன்மையும் அனேகமாக பெண் குழந்தையினை நாடுவதற்கான காரணமாக அமையவல்லது.

அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் பண்பாட்டு வட்டத்தினுள் அவர்களது பிறப்பு தொடக்கம், இறப்பு வரையான வாழ்க்கை ஒழுங்குகளில் சட்ட ரீதியான சமய விதிகள் தொழிற்படுவதோடு பாரம்பரிய பிரதேச சமூகங்களின் பண்பாட்டுத் தாக்கம் தொழிற்படுவதையும் தவிர்க்கமுடியாது. இலங்கை போன்ற நாடுகளில் குடும்பம் என்பது பல்வேறு விடயங்களுக்கான ஆதாரமாக அமையவல்லது. ஆய்வுப் பிரதேசத்தின் பிரத்தியோகமான கூறுகளில் சமூக அந்தஸ்து, பெற்றோர்களை பராமரித்தல் என்பதானது பெண் குழந்தைகளின் மீது இப்பிரதேச மக்கள் நாட்டம் கொள்வதற்கான காரணமாக அமையப் பெற்றுள்ளது. மேலும் உலகில் தோன்றிய அனைத்து சமூகங்களிலும் பெண்ணை முன்னுரிமைப்படுத்திய தாய் வழி சமூக அமைப்பு இருந்ததனைப் போன்று தமிழ் சமூகத்திலும் தாய் வழி சமூகக் கட்டமைப்பு நிலவியது (Paskaran,2017)[15]. கிழக்கிலங்கை சமுதாயத்தில் தாயாதி சமூக நெறி முறையின் நீட்சி கண்கூடு. இதன் காரணமாக ஏனைய பிரதேசங்களை விடவும் இப்பிரதேசத்தில் பெண் குழந்தைகளின் தத்தெடுக்கும் வீதம் அதிகமாகவுள்ளது என்பதனை; அடையாளப்படுத்த முடியுமாகவுள்ளது.

எனவே அம்பாறை மாவட்ட மக்களின் நடைமுறையானது வயோதிப காலங்களில் தமது பெண் குழந்தைகளின் பராமரிப்பின் கீழ் வாழும் நிலைமைஇ சமூக அந்தஸ்து போன்ற காரணத்தினாலேயே ஆய்வுப் பிரதேச மக்கள் அனேகமாக பெண் குழந்தைகளை விரும்புகின்றமை பின்புலமாக தென்படுகின்றது. இந்த நிலைமையானது சில ஆய்வு முடிவுகளுக்கு பிறழ்வாக இருந்த போதிலும் கூட அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் வாழ்வியல் அம்சமானது ஏனையோரிலிருந்து தனித் தன்மை மிக்கதாக இருப்பது சுட்டிக்காட்டததக்கது. இதில் சில நியாயங்களும் சாதக அம்சங்களும் இருந்துள்ள போதிலும் தத்தெடுத்து வளர்த்த பெண் குழந்தையானது அவர்களது வளர்ப்புப் பெற்றோர்களை எந்தளவு தூரம் பராமரிப்பார்கள் என்பது ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டிய அம்சமாகும். இரத்த உறவால் பின்னணிப் பிணைக்கப்படாத இவர்கள் மத்தியில் அன்புப் பாசமும், பெற்றோருக்கான கடமையும் பொறுப்புபையும் முறையாக நிறைவேற்றுவது கேள்விக்குறியே.

தத்தெடுத்தல் செயற்பாட்டிலும் பிரதேசத்துப் பிரதேசம் அதிலும் தொழில் ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் முன்னேற்றம் அடைந்துள்ள பிரதேசங்களில் பெண் குழந்தைகளை தத்தெடுக்கும் நடைமுறையும், பின் தங்கிய கிராமங்களில் ஆண் குழந்தைகளை தத்தெடுக்கும் நடைமுறையும் இருந்து வருகின்றமை நோக்கத்தக்கது. இதற்கான காரணங்களாக, வளர்ச்சியடைந்த பிரதேசங்களில், சொத்துக்கு வாரிசுகள் தேவை என்ற காரணமும், பின் தங்கிய பகுதிகளில் ஆண் குழந்தைகளை தத்தெடுப்பதற்கான காரணமாக, அவர்கள் பின் நாட்களில் தமக்கு உழைத்து தருவார்கள் என்ற மனோ நிலையும் இருக்கின்றது. ஆகவே இவர்களுடைய நடத்தைகள் அவர்களைச் சுற்றியுள்ள நபர்கள், வாழ்வியல் அம்சங்கள், கலாசார நடைமுறைகள் அகச் சூழல், புறச் சூழல், மார்க்கம் சார்ந்த சூழல் மற்றும் கலாசார மற்றும் வழக்காறுகள் என பல்வேறு அம்சங்களினதும் தூண்டல்களினதும், தாக்கத்தினதும் காரணமாகவே இவ்வாறான பிரதேச வாரியான வேறுபாட்டிற்கான காரணிகளாக அமைகிறது எனலாம்.

ஊலக நாடுகளின் இவ்வாறான பின்னணிகள் இலங்கையிலும் அதன் தன்மைக்கேற்ப செல்வாக்கு செலுத்தியதன் விளைவாக அம்பாறை மாவட்ட முஸ்லிம் குடும்பங்களிலும் தத்தெடுத்தலிற்கு எதுவாய் அமைந்துள்ளது. ஊலகளாவிய ரீதியான இந்தநிலைமையானது இலங்கையின் பொதுவான தன்மைக்கேற்ப அம்பாறை மாவட்டத்திலும் பிரதிபலிப்பது குறிப்பிடத்தக்கது.

## தத்துக் குழந்தைகளை பெற்றுக் கொண்ட வழிமுறைகள்

தத்துக் குழந்தைகளைப் பெற்றுக் கொண்ட வழிமுறைகளில் அனேகமானோர் வெளி ஊர்களில் உள்ள வைத்தியசாலைகளில் இருந்து பெறப்பட்டுள்ளமையினை தரவுகள் தெரிவிக்கின்றன. இதன் மூலம் அக்குழந்தைகள் தொடர்பாக யாரும் எவ்வித தகவல்களையும் பெற்றுக் கொள்ள சந்தர்ப்பம் கிடைக்காது என்ற எண்ணப்பாங்கும் அவர்களின் குழந்தைகளை தேடி அப்பெற்றோர்கள் வர மாட்டார்கள் என்ற எண்ணமும் தான் இவ்வாறான தத்தெடுப்பிற்கான காரணியாக அடையாளப்படுத்த முடியும். மேலும் வரலாற்று ரீதியாக பெரும்பாலான தத்தெடுப்புக்கள் குடும்பத்திற்குள்ளேயே இடம்பெற்றுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. அமெரிக்காவின் தரவுகளின் படி அங்கு இடம்பெறும் தத்தெடுப்புக்களில் பெரும்பான்மையானவை இம்முறையின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டதனை சுட்டிக்காட்டப்படுகின்றது (United Nation, 2009)[3].

பெற்றோரின் மரணத்தின் பின்னர் அல்லது குழந்தையை பராமரிக்க இயலாத போது குடும்ப உறுப்பினர் அக் குழந்தையினை பொறுப்பேற்க ஒப்புக் கொள்ளும் போது அல்லது சரணடையும் போது தத்தெடுத்தல் இடம்பெறுவதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது (Ben-Nun, 2016[14]., Rosenthal, 1993)[16]. இருப்பினும், காலப்போக்கில் மக்களுக்கு தமது சொந்தத்துக்குள் தத்தெடுப்பது விருப்பமற்றதாக மாறியது. தனிமனித வாதமும், சொந்தத்தில் தத்தெடுத்தால் குழந்தை மீது முழு உரிமை இருக்காது என்ற நியாயமான அச்சத்தினாலும் தத்தெடுப்பு நிறுவனமயமாக்கப்பட்டதாக சில அறிஞர்கள் சுட்டிக்காட்டுகின்றனர் (Efrat, et al, 2015[17]., Bethmann, et al, 2012[18]., Jeanne, 2004[19]., Walker, 2008)[20]. ஆகவே, உலகளாவிய ரீதியான இந்நிலையே அம்பாறை மாவட்டத்திலும் செல்வாக்கு செலுத்தியுள்ளது நோக்கத்தக்கது. ஏனனில் அதிகமானோர் குடும்பத்திற்குள் தத்தெடுப்பதனை விடவும் வெளி மாவட்டங்களில் தத்தெடுக்கப்பட்ட வீதமே அதிகமாகவுள்ளது குறிப்பிடத்தக்கது.

**சாதகமானஅம்சங்கள்**

அம்பாறைமாவட்டத்தில் குழந்தை தத்தெடுத்து வளர்த்த குடும்பங்கள் மத்தியில் அக் குழந்தையால் குறிப்பிடத்தக்களவு மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. பெரும்பாலானோர் தமது மகிழ்ச்சிக்கு எதுவாய் அமைந்த காரணியாக தமது தத்தெடுத்த குழந்தைகளை படிக்க வைத்து அவர்களை நல்ல நிலையில் வைத்துப் பார்த்தல் என்பதையும்இ சிலர் தம் பிள்ளளைகள் உயர் தொழில்கள் புரிவது, அக்குழந்தைகள் உழைத்துக் கொடுப்பது, அவர்களின் பிள்ளைகளுக்கு திருமணம் செய்து அழகு பார்த்தது மற்றும் தம் கவலைக்கு அரு மருந்தாக இக் குழந்தைகள் அமைந்தது போன்றன அவர்களின் வாழ்க்கைத் தருணங்களில் மிகுந்த சந்தோசத்திற்கு எதுவாய் அமைந்த காரணிகள். இது தொடர்பாக ஒரு பெற்றோர் குறிப்பிட்டமை இங்கு நோக்கத்தக்கது. “எனது மகள் கல்வியற் கல்லூரிகளில் படித்து, தற்போது ஆங்கில ஆசிரியையாக கடமையாற்றுகின்றார். இதனை நினைத்து மிக பெருமைப்பட்டுக் கொள்கின்றேன்" (நேர்காணல் 27).

தத்தெடுக்கப்பட்ட குழந்தைகளின் மீது சகல பெற்றோர்களும் தமது முழு உழைப்பினையும் செலவிடுவதாக அவர்கள் குறிப்பிட்டு இருந்தமை. அதிலும் அவர்களின் படிப்பு மற்றும் அவர்களின் அத்தியாவசிய விடயங்களுக்காகவே அதிக பணத்தினை செலவிடுவதாகவும் மேலும் தம் பிள்ளைகளுக்கு திருமணம் முடித்துக் கொடுத்தவர்கள் அல்லது தொழில் புரியும் பிள்ளைகளின் பெற்றோர்கள் தற்போதும் கூட அவர்களின் செலவு விடயங்களில் பங்கெடுப்பதும் அறிய முடியுமாக உள்ளது. சிலர் தாம் எவ்வளவு கஷ்ட சூழ்நிலையிலும் தம் பிள்ளைகளுக்கவே உழைத்து அவர்களின் நலன்களில் கண்ணும் கருத்துமாக இருப்பது தெளிவாகின்றது. இது தொடர்பாக ஒரு பெற்றோர் குறிப்பிட்டமையை குறிப்பிடலாம். இதிலிருந்து வளர்ப்புப் பெற்றோர் தமது குழந்தைகளின் மீது அதீத அன்பு செலுத்துகின்றமை கண்கூடு. எனினும் இதற்கு மாறாக வளர்ப்புக் குழந்தைகள் அவர்களின் அவ்வாறான அன்பு, பாசத்துடன் இருப்பார்களா என்பது ஆய்வுக்குட்படுத்த வேண்டிய விடயமாகும். குழந்தை இன்மையால் ஏற்பட்ட சொல்லொண்ணாத் துயரத்திற்குப் பகரமாக இவ்வாறான மகிழ்ச்சிகரமான விடயங்கள் அவர்களை ஆறுதலாகவும், மன நிம்மதியினையும் பெற்றுத் தந்த ஒன்றாக கருதப்படுகின்றது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் தத்தெடுத்தல் மூலம் அப் பெற்றோர்கள் அடைந்த மகிழ்ச்சிகரமான தருணங்களை விடவும் துக்கரமான விடயங்களே அதிகம் இடம்பெற்று இருக்கின்றமையினை தரவுகள் தெரிவிக்கின்றன.

**பாதகமானஅம்சங்கள்**

குழந்தை இன்மையால் ஏற்பட்ட உளவியல், குடும்ப, சமூக தாக்கங்கள் போன்று அதனை தத்தெடுத்து வளர்த்ததன் பிற்பாடும் பல்வேறு சிக்கல்களுக்கு அப் பெற்றோர் முகம் கொடுப்பது குறிப்பிடத்தக்கது. இங்கு அப்பெற்றோர் மாத்திரமின்றி வளர்ப்புக் குழந்தைகளும் பாதிப்புக்குள்ளாகுவது குறிப்பிடத்தக்கது. குழந்தையின்மையால் உளப் பாதிப்புக்களுக்கு முகம் கொடுத்தது போன்று தத்தெடுத்ததன் பிற்பாடும் அதிகமான உள ரீதியான நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்திருகின்றமையினை தரவுகள் தெரிவிக்கின்றன. அம்பாறை மாவட்ட முஸ்லிம் குடும்பங்களில் குழந்தை இல்லாமையினால் ஏற்பட்ட வலியினை விடவும் அதனை வளர்த்த பின்பு ஏற்படுகின்ற கஷ்டமானது வாழ்வில் சொல்லொண்ணாத் துயரினை ஏற்படுத்தியமை சுட்டிக்காட்டத்தக்க அம்சமாகும். இவ்வாறான கேள்விகள் பெற்றோர்களுக்கு சங்கடத்தினையும் கஸ்டத்தினையும் ஏற்படுத்தியது போலவே வளர்ப்புக் குழந்தைகளுக்கும் உளரீதியான பாதிப்புக்களை ஏற்படுத்தியமையை காணலாம். இந்த அனுபவம் தான் உலகளாவிய மற்றும் தேசிய ரீதியிலும் காணப்படுகின்றது. இதனை சில இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. பிள்ளையை வளர்க்கும் விடயம் அக் குழந்தைக்கு தெரியாவிட்டாலும் சமுதாயம் அதனை அறிந்துள்ளதால் எப்போதாவது அப் பிள்ளைக்கு தெரியவரும் போது மனோரீதியாக பாரிய அளவில் பாதிக்கப்படக் கூடும் என (Horwitz et al, 2013)[21] குறிப்பிடுவது போல அம்பாறை மாவட்ட தத்தெடுத்து வளர்த்த குழந்தைகளின் நிலைமையும் அவ் ஆய்வு முடிவுகளுடன் ஒத்துச் செல்கின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

மேலும் குழந்தைகள் உளவியல் ரீதியாக மிகக் கடுமையாக பாதிக்கப்படுவதாகவும், தமதுகல்விமற்றும் இதர வேலைகளில் ஆர்வம் காட்டமையும் ஏற்பட்டிருக்கின்றது என்பதனை தரவுகள் காண்பிக்கின்றன. இவ்வாறான உளப்பாதிப்புகள் காரணமாக குழந்தைகளின் எதிர்காலம் பாழாக்கப்படுவதோடு அதன் நிம்மதியும் இழக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. அக்குழந்தைகளின் சுயமரியாதை என்பது தத்தெடுத்தல் மூலம் இழக்கப்படுவதாகவும், இதன் காரணமாக தமக்கான நண்பர்களைத் தேர்வு செய்வது மிகப் பெரிய சவாலாக இருப்பதாகவும் அதனால் அப்பிள்ளைகள் தமது நிம்மதியினை இழப்பதாகவும் வளர்ப்புப் பெற்றோர்கள் அடையாளப்படுத்துகின்றனர். எனவே உலகளாவிய ரீதியில் தத்தெடுப்பானது ஒரு குழந்தையின் வாழ்வில் பல்வேறு சங்கடங்களையும், சிக்கலையும் ஏற்படுத்தும் ஒரு உறவு நிலை என சப்னம் இஷாக் (Ishaque, 2008)[22] குறிப்பிடுவது இவ்வாய்வின் கருத்து நிலைக்கு வலுச் சேர்ப்பதாக அமைகின்றது.

தத்தெடுத்தல் மூலம் குடும்ப ரீதியான பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதனை தரவுகள் மூலம் அறிய முடியுமாக உள்ளது. ஆய்வுப் பிரதேசத்தில் தத்தெடுத்து வளர்த்த ஆண் குழந்தைகளில் ஒரு சிலர், தாம் வளர்ப்புக் குழந்தைகள் என தெரிந்ததுடன் அக் குடும்பத்தினை விட்டும் விலகிச் செல்லும் நடைமுறையும் காணப்படுகின்றது. இதனால் அக் குடும்பத்தினர் பலத்த கவலைகளுக்கும், மன ரீதியான இழ விரக்கத்திற்கும், சமூக ரீதியான சங்கடத்திற்கும் உள்ளாக்கப்படுகின்றனர். வளர்ப்புக் குழந்தைகளுக்கு தெரிய வரும் பட்சத்தில் தமது உயிரியல் குடும்பத்துடனும், வளர்ப்புக் குடும்பத்துடன் தொடர்ந்து கதைக்காமல் விலகிச் செல்வதுஇ தமது வெறுப்பினை காட்டுவது அவர்கள் உணர்வு ரீதியாக பாதிக்கப்பட்டதனை எடுத்துக் காட்டுகின்றது. இந்த நிலை கிழக்கு நாடுகளில் அதிகமாக இடம்பெருகின்றது சுட்டிக்காட்டத்தக்கது (Ishaque, 2008)[22] மேலும் அமெரிக்காவில் தத்தெடுப்பதின் மூலம் இரத்த சம்பந்தமான அடையாளம் துடைத் தெரியப்படும் என்ற நிலை மக்கள் மத்தியில் தூண்டப்படுவதாக பென் - நுன் (Ben – Nun,2016)[14]தனது ஆய்வில் சுட்டிக் காட்டுகின்றார்.

தத்தெடுக்கப்பட்ட குழந்தைகள் தமது இரத்த பந்த உறவை கண்டு பிடித்துக் கொள்ள உரிமை உண்டு என்ற நோக்கிலான தீர்ப்புக்கள் வரத் தொடங்கிய தன் விளைவாக, சுய அடையாளத்தை அறிந்து கொள்ளும் உரிமை ஒவ்வொருவருக்கும் இருக்கிறது என்ற கோணத்தில் இந்த விவாதங்கள் நடைபெற்று வருகின்றதாக குறித்துக் காட்டுகின்றார். எனவே அம்பாறை மாவட்டத்தின் நிலையானது உலகளாவிய ரீதியான ஒரு பொது முடிவிலிருந்து விலகிச் செல்வது குறிப்பிடத்தக்கது.

ஆய்வுப் பிரதேசத்தில் வளர்ப்புப் பிள்ளைக்கும் சொந்தப் பிள்ளைகள் மற்றும் அக் குடும்பத்திலுள்ள பிள்ளைகளுக்கு மத்தியில் பொறாமை மற்றும் குரோத உணர்வு ஏற்படுவது அவதானிக்கத்தக்கது. சொந்த சகோதர சகோதரிகளுக்கு மத்தியிலே பிரச்சினைகளும் சச்சரவுகளும் சகஜமாக இடம்பெறும் காலகட்டத்தில் வளர்ப்புக் குழந்தைகளுக்கு மத்தியில் பிரச்சினைகள் ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகும். ஒரு பாலினக் குழந்தைகள் இருக்கும் போது மற்றைய பாலினக் குழந்தைகளை தத்தெடுப்பதால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுவதாக ஆய்வு முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன (Briggs, 2003)[23]. வளர்ப்புக் குழந்தைக்கும், சொந்தக் குழந்தைக்குமிடையில் குரோதங்களும் வெறுப்பு மற்றும் காழ் புணர்ச்சி போன்ற கோப உணர்வுகள் ஏற்பட்டுள்ளதாக கொஹ்லர் (Kohler,2002)[24] குறித்துக் காட்டுகின்றார். இரத்த உறவுகள் அல்லாத வேறு நபர்களின் குழந்தைகள் மீது சொந்தக் குழந்தைகளுக்கு கோபம் ஏற்படுவது என்பது இயல்பான ஒன்றாகும். ஊலக ரீதியான அனுபவமானது அம்பாறை மாவட்டத்திலுள்ள முஸ்லிம்களிடம் இடம் பெறுவது போல இலங்கையிலுள்ள முஸ்லிகள் மத்தியிலும் இடம் பெறுகின்றமை பற்றி ஆய்வுக்குட்படுத்துவது சிறப்புக்குரியதாகும்.

இப்பெற்றோர்கள் தமது வளர்ப்புக் குழந்தைகளுக்கு தம்மிடமுள்ள அனைத்துச் சொத்துக்களையும்; வழங்கியதன் விளைவாக குடும்பத்திற்குள் பிரச்சினைகள் ஏற்பட்டது. இதன் காரணமாக குடும்பத்திற்குள் பொருளாதார ரீதியான சிக்கல்கள் ஏற்படுவதுடன் அக் குழந்தை மற்றும் வளர்ப்புப் பெற்றோர்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. வாரிசுச் சட்டம் குறித்த அறிவின்மையால் அவர்களுக்கு மத்தியிலே சொத்தை மையமாகக் கொண்டு கருத்து வேறுபாடுகள், சண்டை சச்சரவுகள் ஏற்படும் அபாயம் குறித்தும் அல்குர்ஆன் முன்னெச்சரிக்கை செய்துள்ளது (Kutty, 2014)[25].

## இஸ்லாமிய அறிவு நிலை

அம்பாறை மாவட்டத்தில் குழந்தை தத்தெடுத்து வளர்த்த குடும்பங்களில் தத்தெடுப்பு தொடர்பில் இஸ்லாமிய அறிவு நிலை போதியளவு இல்லை. அதாவது அவர்கள் குழந்தைகளை தத்தெடுத்த பின்னர் தான் இஸ்லாமிய ஷரீஆவின் நிலைப்பாடு பற்றி தெரிய வந்துள்ளது. முஸ்லிம் சமூகத்தில் தத்தெடுப்பு சர்வசாதாரணமாக இடம்பெறுவதுடன் அது பற்றிய போதிய அளவு மார்க்கத் தெளிவு சமூகத்தில் காணப்படவில்லை. இதனால் இஸ்லாம் ஹராமாக்கிய, கண்டிப்பாக தவிர்க்கப்பட வேண்டும் என அல்குர்ஆனும் நபியவர்களும் வலியுறுத்திய விடயத்தினை இன்று சமூகம் செயற்படுத்தி வருகின்றது என மன்சூர் (Mansoor, 2020)[26] குறிப்பிடுவது இம் மாவட்டத்திற்கும் இயைந்து செல்கின்றது.

மேலும் பெண் பிள்ளைகளை எடுத்து வளர்த்து திருமணம் முடித்துக் கொடுத்தவர்கள்தம் பிள்ளைகளுக்கு அனைத்து சொத்துக்களையும் கொடுத்தமையும் ஏனையவர்கள் அவர்களின் அனைத்துச் சொத்துக்களையும் கொடுக்க இருப்பதாகவும், குறிப்பிட்டு இருப்பதானது இவர்கள்

மத்தியில் மார்க்க அறிவு போதியளவு இல்லை என்பதை அடையாளப்படுத்துகின்றது. தத்தெடுப்பு தொடர்பான அறிவும் தெளிவும் அது போன்று வாரிசுத் சொத்து தொடர்பான போதியளவு அறிவு நிலையும் காணப்படவில்லை. குழந்தையினை தத்தெடுத்து தனது உயிரியல் குழந்தைகள் என்ற போர்வையில் இஸ்லாமிய ஷரீஆவின் அடிப்படைகளை புறக்கணித்துக் கொண்டிருப்பதாக இஷாக் (Ishaque, 2008)[22]குறிப்பிடுவது இம் மாவட்ட தத்தெடுத்து வளர்க்கும் குடும்பங்களுக்கு பொருந்துவதாகவே அமைகின்றது.

**முடிவுரை**

அம்பாறை மாவட்டத்தில் குழந்தை தத்தெடுத்தல் தொடர்பான முஸ்லிம்களின் நடத்தையினை பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. அந்தவகையில் குழந்தைப் பேறின்மையும் அது ஏற்படுத்தும் பல்வேறு உளவியல் தாக்கங்கள், குடும்பப் பிரச்சினைகள் மற்றும் சமூகப் பிரச்சினைகள் என்பன தான் தத்தெடுப்பிற்கு கோலோச்சிய பிரதான சூழலமைவு. ஆய்வுப் பிரதேசத்தில் குறிப்பாக பின் தங்கிய பிரதேசங்களில் ஆண் குழந்தைகளை தது;தெடுத்தாலும் முன்னேற்றமடைந்த பகுதிகளில் பெரிதும் பெண் குழந்தைகளை தத்தெடுக்கும் பழக்கம் மேலோங்கிக் காணப்படுகிறது. வெளி ஊர்களில் உள்ள வைத்தியசாலைகள் போன்ற அறிந்து கொள்ள முடியாத மூலங்களிருந்து தத்துக் குழந்தைகளைப் பெற்றுக் கொண்ட வழிமுறைகள் அதிகம் வழக்கில் உள்ளது. வளர்ப்புக் பெற்றோரும், குழந்தைகளும் தத்தெடுத்ததன் பிற்பாடு உளவியல் ரீதியாக, குடும்ப மற்றும் சமூக ரீதியாக பல்வேறு சிக்கல்களுக்கு முகம் கொடுத்திருப்பது சுட்டிகாட்டத்தக்கது. மேலும் அம்பாறை மாவட்டத்தில் குழந்தை தத்தெடுத்து வளர்த்த குடும்பங்களில் தத்தெடுப்பு தொடர்பில் இஸ்லாமிய வழிகாட்டுதல் பற்றிய அறிவு நிலை போதியளவு இல்லை. தத்தெடுத்த குடும்பங்களுக்கான மார்க்க போதனைகளை நடைமுறைப்படுத்த மற்றும் செயல்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தினை முஸ்லிம் குடும்பங்களுக்கு உணர்த்துவதுடன் தத்தெடுத்தல் செயற்பாடு ஏற்படுத்தும் விளைவுகள் குறித்தும் அதிகமான ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும். மேலும் இவ்வாய்வுக்காக குறிக்கோள் மாதிரி அடிப்படையில்நேர்காணல் முறைக்கு ஆய்வுக் குடித் தொகை மாதிரியை அதிகரிப்பதன் மூலம் ஆய்வின் நம்பகத்தன்மையினை மேலும் அதிகரிப்பதுடன், சிறந்த ஆய்வு முடிவுகளையும் பெற்றுக் கொள்ள முடியுமாக காணப்படும்.

## References


1. Dinakaran. (2011). Legal situation in Sri Lanka regarding child adoption. Retrieved (2011.02.02) from: http://www.thinakaran.lk
2. Zhang, W. Child adoption in contemporary rural China. (2006). *Journal of Family Issues,* 27(3), https://doi.org/10.177/0192513x0583096
3. United Nation. (2009). Child adoption: trend and policies. United Nation Publication.https://www.un.org/en/development/desa/population/publications/pdf/policy/child -adoption.pdf
4. Rifath, B. A. K., Rishadh, M. N., & Farij, M. J. M. (2019). Kuḻanthaiyaith thattheduthal-oru islāmiya nōkku. Proceedings of 6th International Symposium of Faculty of Islamic Studies and Arabic Language on *Contemporary Trends of Islamic Sciences and Arabic Studies for the Nation Development*, 12th December 2019, South Eastern University of Sri Lanka, Oluvil, Sri Lanka. http://ir.lib.seu.ac.lk/handle/123456789/4024

5. Marsoof, S. (2016). *Adoption of children in Islam and the Muslim law of Sri Lanka*. Available at Academia: https://www.academia.edu/34554763/Adoption_of_Children_in_Islam_and_the_Muslim_Law_of_Sri_Lanka_by_Justice_Saleem_Marsoof_Presidents_Counsel_Judge_of_the_Supreme_Court_of_Sri_Lanka?source=share
6. Baikaie, M., Farajkhola, T., Fnjezab, B., Heidari, P., Zarchi, M, K. (2012). Barriers of child adoption in infertile couples; Iranian views. *Iranian Journal of Reproductive Medicine*, 10(5), 429–434,PMC4169680/PMID25246908
7. Bernal, R., Luojia, H., Chiaki,. Moriguchi., Nagypel, E. (2007). Child Adoption in the United States: Historical Trends and the Determinants of Adopted Demand and Supply 1951- 2000. *National Science Foundation*, doi: 10.1.1.700.
8. Oladokun, A., Arulojun, O., OladokunR.,Morhanson, I, O., Bamghoya, E, A., Adewole I, F., Ojengbede, O, A. (2009). Acceptability of child adoption as management option for infertility in Nigeria: evidence from focus group discussion. *African Journal of Reproduction Health*. 13(1), 79-91, e1SSN: 111824841/55661/article/20%text-93191-1-10-20100615
9. Fonseca, C. (2003). The politics of adoption: child rights in the Brazilian setting. Australian Journal of Social Issues, 21(2), 189-211, https://doi.org/10.1111/1467-9930
10. Baltimore, D.L. (2008). Understanding the concept of adoption: A qualitative analysis with adoptees and their parents. Lowa State University. https://dr.lib.iastate.edu/server/api/core/bitstreams/4c24e9fa-f57c-40e2-9fc02a30bb8f951f
11. Eke, C.B., Obu, H.A., Chinawa, J.M., Adimora, G.N., & Obi, J.E. (2014). Perception of child adoption among parents/ care givers of children attending pediatric outpatients' clinics in Enugu, South East, Nigeria. *Nigerian Journal of Clinical Practice, 17*(2), 188-195, doi: 10.4103/1119-3077.127549
12. Marker, R. J., Tith, T. L. (2002). The evaluation of infertility. *National Library of Medicine*, PMID:14569805 doi:10.1309/w8LJ
13. Nusrath, M. (2017). Panpaaddumayamaakkamum Muslim samookam ethirkollum savaalkalum: Sammanthurai pirivu irandinai maiyappaduththiya oor samookavoyil aaivu. E-Proceeding of 6th South Eastern University Arts Research Session 2017 0n "*New Horizons Towards Human Decvelopment*", 26th June 2018. South Eastern University of Sri Lanka, Oluvil, Sri Lanka. http://ir.lib.seu.ac.lk/handle/123456789/3213
14. Ben–Nun, L. (2016.) Adopted children. Israel: B.N. Publication House. https://www.researchgate.net/publication/296485621_ADOPTED_CHIL DREN
15. Paskaren, S. (2017). Marumakkalthaayam: marapumthodarchchiyum (Kilakkilangkai Tamil Samookaththai adippadaiyaakak konda munvaraipu). Proceedings of 7th International Symposium on "Multidisciplinary Research for Sustainable Development", 7th December 2017. South Eastern University of Sri Lanka, Oluvil, Sri Lanka. http://ir.lib.seu.ac.lk/handle/123456789/3118
16. Rosenthal, J, A. (1993). Outcomes of adoption of children with special needs. *The future of Children Journal*, https://doi.org/10.2307/1602403
17. Efrat, A., Lebleng, D., Liao, S., Pandya, S. (2015). Babies across boarders: The political economy of international child adoption. *International Students Quarterly*, 59(3), 615-628, https://doi.org/10.1111/isqu.12206
18. Bethmann, D., & Kvasnicka, M. (2012). Theory of child adoption. *Ruhr Economic Paper*, 342. http://dx.doi.org/10.2139/ssrn.2084186

19. Jeanne, A.H., Smith, S.L., & Scott D. R. (2004). A comparative study of child welfare adoptions with other types of adopted children and birth children. *Adoption Quarterly, 7*(3), 1-30.doi: 10.1300/J145v07n03_01
20. Walker, J. (2008). The use of attachment theory in adoption and fostering. *Adoption & Fostering, 32*(1), 49-57, Doi: 10.1177/030857590803200107
21. Horwitz, S, M., Hurlburt, M, S., Fiebert, J, D, G., Palinkes, L, A., Reutz, J, R., Zharg, J., Fisher, E., Landsverk, J. (2013). Exploration and adoption of evidence-based practice by us child welfare agencies. Children and Youth Services Review, 36, 147- 152, https://doi.org.10.1016/J.childyouth.2013.10 004
22. Ishaque, S. (2008). Islamic principles on adoption: examining the impact of illegitimacy and inheritance related concerns in context of a child's right to an identity. *International Journal of Law, Policy and the Family, 22*(3), 393– 420, https://doi.org/10.1093/lawfam/ebn009
23. Briggs. (2003). Mother, child, race, nation: the visual iconography of rescue and the policy of transnational and transracial adoption. *Gender and History,* 15(2),179-200, https://onlinelibrarywiley.com.doc/pdf/10.1111/1468.0424.00298
24. Kohler, J. K., Grotevant, H. D., & McRoy, R. G. (2002). Adopted adolescents' preoccupation with adoption: the impact on adoptive family relationships. *Journal of Marriage and the Family*, 64(1), 93-104, https://doi.org/10.1111/j.17413737.2002.00093.x
25. Kutty, Faisal. (2014). Islamic law and adoptions. Cambridge Scholars Publishing, Valparaiso Univsity, Legal Studies Research Paper No. 14-5, Available at SSRN: https://ssrn.com/abstract=2457066
26. Mansoor. M.A.M. (2020). *Thatheduththu valarththalai Islam angeegarikkirathaa?* [Does Islam Allow Child Adoption] [Video file]. YouTube. https://www.youtube.com/watch?v=rEn7qWJiK9E